பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 04 2025 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தற்போது புதுதில்லியில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சியில் வழங்கி வருகிறார்.

2. பிரான்சிடமிருந்து 26 ரபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

3. மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் உரிய பலன்களை அளித்து வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. மாநில அமைச்சராக திரு மனோ தங்கராஜ் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

5. தெற்காசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 13 தங்கம் மற்றும் 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தற்போது புதுதில்லியில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சியில் வழங்கி வருகிறார்.

பத்ம விபூஷன் விருதுகளை **Duvvur Nageshwar Reddy** உட்பட ஏழு பேர் பெற்றுக்கொண்டனர்.

நடிகர் அஜித் குமார் பத்ம பூஷன் விருதினை பெற்றுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - விருது அஜித் – 10 செகண்ட்ஸ்)*

கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஷ்வின் பத்ம ஸ்ரீ விருதினை பெற்றுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - ரவிச்சந்திரன் அஷ்வின் – 10 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்காரணமாக பாகிஸ்தானுக்கு இந்தியா உரிய பதிலடி கொடுத்து வருவதாக தெரிவித்தார்.

அரசு கொள்கையாகவே தீவிரவாதத்துக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு பிறகு பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது என்றும் திரு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<<>>>>>

பஹல்காம் தாக்குதல் சம்பவம் தொடர்பாக, காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்துவரும் கருத்துக்கள் கண்டனத்திற்குரியது என்று பிஜேபி கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவிசங்கர் பிரசாத், நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக காங்கிரஸ் தலைவர்கள் கருத்துக்களை தெரிவிப்பதாக குற்றம் சாட்டினார்.

இதுபோன்ற கருத்துக்களை தெரிவிப்பவர்கள் மீது காங்கிரஸ் தலைவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உலக நாடுகள் அனைத்தும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்ததையும் திரு ரவிசங்கர் பிரசாத் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

பிரான்சிடமிருந்து 26 ரபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் பிரான்ஸ் நாட்டு அதிகாரிகள் பங்கேற்றனர்.

கடற்படைக்கு 26 ரபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் இந்த விமானங்கள் இந்தியாவிற்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ என் எஸ் விக்ராந்த் மற்றும் ஐ என் எஸ் விக்ரமாதித்யா போர் கப்பலில் இந்த விமானங்கள் இணைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் உரிய பலன்களை அளித்து வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், ரத்த அழுத்தம் மற்றும் நீரழிவு நோய் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கு இந்த திட்டம் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான புள்ளி விவரங்களையும் பகிர்ந்துள்ள முதலமைச்சர், இந்த திட்டம் முன்னோடி திட்டமாக திகழ்கிறது என்றும் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மாநில அமைச்சராக திரு மனோ தங்கராஜ் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திரு ஆர் என் ரவி, அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உட்பட பலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மாநில அமைச்சர் பதவியை திரு செந்தில் பாலாஜி, திரு பொன்முடி ராஜினாமா செய்ததையடுத்து, புதிய அமைச்சராக திரு மனோ தங்கராஜ் பதவியேற்றுள்ளார்.

அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு மனோ தங்கராஜுக்கு பால்வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மாநில அமைச்சர் திரு ஐ பெரியசாமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக தொடரப்பட்ட சொத்து குவிப்பு வழக்கிலிருந்து அவர்களை விடுவித்து திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம் பிறப்பிக்க உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

இதுதொடர்பான மேல் முறையீட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதி திரு வேல் முருகன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

திண்டுக்கல் மாவட்ட சிறப்பு நீதிமன்றம் குற்றச்சாட்டுகளை பதிவு செய்து விசாரணையை தினசரி அடிப்படையில் நடத்தி, ஆறு மாதத்தில் முடிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்த அவர், கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்றும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 42 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, ஈரோடு மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், போக்குவரத்து நிறுத்தத்தில் பசுமை பந்தல் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - மூர்த்தி – 42 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

-------------------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி உமா பயனாளிகளுக்கு வழங்கினார்.

----------------

தருமபுரியில் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் 75 ஆண்டு நிறைவு குறித்த விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் வாழ்வியல் வழிகாட்டு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஹஜ் புனித யாத்திரை செல்லவுள்ள 436 பேருக்கு சிறப்பு தடுப்பூசி முகாம் இன்று நடைபெற்றது.

--------------------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி கிளை சிறைச்சாலையில் மாவட்ட நீதிபதிகள், ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

-----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மின்னணு முறையில் பயிர் சாகுபடி பரப்பினை கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

-----------------------

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கிணற்றில் குளித்த கல்லூரி மாணவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

--------------------

மதுரை மாவட்டம் அரியூர்பட்டி கிராமத்தில் உள்ள சாத்தன்கண்மாயில் மீன்பிடி திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

--------------------

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலய சுவாமி கோவில் சித்திரைத் திருவிழாவுக்கான கொடியேற்ற நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தெற்காசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 13 தங்கம் மற்றும் 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

காட்மாண்டுவில் நடைபெற்ற இப்போட்டியில், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவிலும், 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளிலும் இந்தியா 3 தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 19 மற்றும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவுகளிலும், கலப்பு குழு பிரிவுகளிலும் இந்தியா ஆறு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஒற்றையர் பிரிவுகளிலும் இந்தியாவிற்கு 4 தங்கப்பதக்கங்கள் கிடைத்தது.

---------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா 12 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவுகளில் **Meitei Ambekar**, **Amman Dev, Tikam Singh, Udhan Singh Raghav**, **Rahul Gariya**, **Aman Siwach** ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Jiya, Ahaana Sharma, Prachi, Himanshi, Sanvi, Prachi Khatri,** ’’’ ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

----------------

ஆசிய கோப்பை **Base Ball** போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

இதற்கான தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியா – தாய்லாந்தை வென்றது.

-----------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில், இந்தியா இடம்பெற்றுள்ள பிரிவில் மியான்மர், இந்தோனேஷியா மற்றும் துர்க்மெனிஸ்தான் அணிகள் உள்ளன.

இப்போட்டி மியான்மரில் ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தேதி தொடங்கி, 10-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

-----------

**Menorca** ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் முரளி கார்த்திகேயன் வெண்கலப்பதக்கம் வென்றார்.

--------

ஆசிய யோகாசன சாம்பியன் போட்டியில் 87 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

**<<<<<END>>>>>**